**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 187/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Accused | : | D.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபாலகிருண்ணன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | செல்லப்பன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on21.07.2025.

முதல் விசாரணை

1. நான் கோயம்புத்தூரில் வசித்து வருகிறேன். மோட்டார் வாகனம் வேலை செய்து வருகிறேன். 25.08.2006 ல் தினேஷ் என்பவரிடமிருந்து 13 ஏக்கர் 37 செண்டை வாங்கினேன். மீதமுள்ள 5 ஏக்கர் 8 செண்ட் 24 8 2006 இல் மகேஷின் அக்கா மகன் பாலாஜியிடம் இருந்து வாங்கினேன். 11 ஏக்கர் 45 சென்ட் நிலம் வாங்கினேன். 2008 ல் ஏப்ரல் மாதம் மின்சார இணைப்பு எண் 245 பெயரை மாற்றம் செய்ய உடுமலைப்பேட்டை மின்சார வாரியத்திற்கு வந்து விண்ணப்பம் கொடுத்தேன்.
2. விவசாயம் மின்சார விண்ணப்பத்தை வாங்கிக் கொண்டு இரண்டு நாள் கழித்து என்னை அழைத்தார்கள். நான் சென்று பார்த்த பொழுது எனது கையொப்பம் மட்டும்தான் உள்ளதாகவும் விற்றவர்களின் கையொப்பம் இல்லை எனவும் கூறினார்கள். அது அதன் பெயரில் விண்ணப்பத்தை திருப்பி விட்டார்கள் இது குறித்து தினேஷ் என்பவர் தெரிவித்தேன். மின்சார விண்ணப்பத்தில் விற்றவரின்

கையொப்பம் வேண்டும் என கூறியதாக தெரிவித்தேன் மாலைக்குள் அழைப்பதாக தினேஷ் தெரிவித்தார். மாலை அழைத்தார்.

3. கோயம்புத்தூர் நூறடி ரோட்டில் உள்ள அலுவலகத்தில் விண்ணப்பத்தை வைத்துள்ளதாக அழைத்து தெரிவித்தார். நான் மறுநாள் சென்று பெற்றுக் கொண்டேன். அந்த விண்ணப்பத்தை உடுமலை மின்சார வாரியத்தில் கொடுத்தேன். எனது கையொப்பம் இட்டும், முன் விற்றவர் கையொப்பம் இருந்ததாலும் கொடுத்தேன்.
4. அடுத்த மாதம் மே மாதம் 2008 இல் பெயர் மாற்றம் செய்து கொடுத்து விட்டார்கள். 2011 வரை எந்த பிரச்சனையும் இல்லை 2011ல் கோமங்கலம் காவல் நிலையத்தில் இருந்து என்னை அழைத்தார்கள். அங்கு சென்ற பொழுது மகேஷ் என்பவர் உங்கள் மீது புகார் கொடுத்துள்ளதாகவும் நீங்களும் எனது மனைவி கலாமணி, எனக்கு விற்றவர் தினேஷ், தினேஷிற்கு விற்ற ஸ்ரீதர், ஸ்ரீதர் இன் ஓனர் ராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் பெயரில் மகேஷ் என்பவர் புகார் கொடுத்துள்ளதாக தெரிவித்தார்.
5. கோமங்கலம் இன்ஸ்பெக்டர் அழைத்து எங்களை விசாரித்தார். இடத்தை மிரட்டியும் ஏமாற்றும் வாங்கியதாக புகார் கொடுத்துள்ளதாக தெரிவித்தார் நாங்கள் அது குறித்து மறுத்து ஆவணங்களையும் சமர்ப்பித்தோம் போலீசார் அனைத்து இடங்களிலும் சாட்சிகளிடமும் விசாரித்து உண்மைக்கு புறம்பானது எனவும் காவல் நிலையத்திற்கும் ஒரு பதிவு அலுவலகத்திற்கும் ஒரு கிலோமீட்டர் தான் உள்ளது எனவும் அவர் இது குறித்து புகார் கொடுக்க வரவில்லை எனவும் 2012 ம் வருடம் வரவில்லை என்றும், இன்றைய தினம் நிலத்தின் மதிப்பு ஏறிவிட்டதால் உண்மைக்கு புறம்பாக புகார் கொடுத்துள்ளதாக புகாரை திருப்பி விட்டார்கள். இதை புகாரை மீண்டும் கோயம்புத்தூர் எஸ்பி அலுவலகத்தில் 2011 இல் கொடுத்தார்கள். அங்கு எஸ் பி ஆபீஸில் அலுவலகத்தில் என்னை அழைத்து விசாரித்த பொழுது அங்கும் கோமங்கலம் காவல் நிலையத்தில் என்ன விசாரித்தார்கள் என்று சொல்லியும், அதே சங்கதிகள் இருந்ததால் என்னை திருப்பி அனுப்பி விட்டார்கள். 2012 இல் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் இருந்து என்னை அழைத்தார்கள். நீங்கள் மின்சார இணைப்பில் போலியாக கையெழுத்து போட்டு மாற்றி உள்ளதாக தெரிவித்தார்கள் அதுபோன்று நான் போடவில்லை என கூறி வாக்குமூலமாக எழுதிக் கொடுத்தேன் அதில் எங்களிடம் சந்தியா மகேஷ் என மாதிரி கையொப்பங்கள் சுமார் 20 முதல் 30 கையொப்பங்கள் வாங்கினார்கள், கையொப்பம் மாதிரிக்காக எனவும் வாங்கினார்கள். அதனுடன் சந்தியா மகேஷ் என்பவர் பெயரில்

உள்ள மூன்று ஆவணங்கள் வாங்கினார்கள். அதை சென்னைக்கு அனுப்பினார்கள். அதில் உள்ள கையொப்பங்கள் நீங்கள் போடவில்லை என கூறி நீதிமன்றத்தின் மூலம் அந்த ஆவணங்களை எங்களிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

6. மீண்டும் 2014 இல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் எனது பெயரிலும் தினேஷ் பெயரிலும் கோமங்கலம் ரிஜிஸ்டர் பெயரிலும் ஏமாற்று கிரயம் வாங்கியதாக ரிட் பெட்டிஷன் தாக்கல் செய்தார்கள் அந்த ரிட் பெட்டிஷனில் மகேஷ் முன்னுக்கு பின்னாக பேசியதாக உண்மை தன்மை இல்லை எனவும் ரிட் பெட்டிஷன் தள்ளுபடி செய்து விட்டார்கள். 2014 இல் எஸ் பி ஆபிஸில் எனது மீது கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுக்க சொல்லி சென்னையில் உத்தரவு பெற்றுக் கொண்டு கருணாகர் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார் நான் வாக்குமூலம் கொடுத்து விட்டேன். என்னை அனுப்பிவிட்டார்.
7. 2018 மீண்டும் மகேஷ் என்பவர் திருப்பூர் கோர்ட்டில் நாங்கள் மகேஷையும் அவரது அக்கா மகன் பாலாஜியையும் ஏமாற்றியதாக கோமங்கலத்திலும், கோவையிலும் புகார் கொடுத்த நிலையில் திருப்பூரில் நானும் பாலாஜியும் சேர்ந்து மகேஷை மகிழ்ச்சி ஏமாற்றியதாக புகார் கொடுத்தார். அந்த கோர்ட்டில் இரண்டு வருடங்கள் வழக்கு நடந்தது. மீண்டும் உடுமலை சிவில் கோர்ட்டுக்கு வந்தது. வழக்கு எண் 442/ 2018. அந்த வழக்கு 2023 இல் தள்ளுபடி செய்து விட்டார்கள். அதில் மகேஷ் ஆஜராகவில்லை எனவும், எனக்கு பாலாஜி எழுதி கொடுத்த பத்திரங்களில் மகேஷ் தான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்பதாலும், அக்கா மக ஏமாற்றியதாக வழக்கு தொடுத்துள்ளதாலும் தள்ளுபடி செய்து விட்டார்கள்.மகேஷ் என்பவர் என் மீது பொய்யாக வழக்குகள் போட்டுள்ளார். நிலத்தின் மதிப்பு கூடி விட்டதால் என் மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளார்.
8. கருணாகரன் இன்ஸ்பெக்டர் முடித்த வழக்கை உத்தரவு பெற்றுக் கொண்டு மீண்டும் அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்து வந்துள்ளார்கள். பொள்ளாச்சி நீதிமன்றத்தில் நடந்து வந்தது. தற்போது கோயம்புத்தூருக்கு மாற்றி உள்ளார்கள். இன்னும் மாற்றம் செய்யப்பட்டு கோயம்புத்தூருக்கு வரவில்லை.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நில அபகரிப்பு வழக்கு பொள்ளாச்சியில் விசாரணையில் நிலுவையில் உள்ளது என்றால் இரண்டாவது வழக்கு நிலுவையில் உள்ளது.
2. நீங்கள் இந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்துள்ள வழக்கு சந்தியா சந்தியா மகேஷ் என்பவரது கையெழுத்தை போலி

கையெழுத்தாக இட்டு மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்கு நடந்து வருகிறது என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தமாக தான் தற்பொழுது சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் ஆமாம் நீங்கள் தினேஷ் என்பவரிடமிருந்து தான் கிரையம் வாங்கினீர்கள் என்றால் ஆமாம். அந்த தினேஷ் என்பவர் அவரது பெயரில் மின்னிணைப்பு மாற்றம் வாங்கிக் கொள்ளவில்லை என்றால் ஆமாம்.

3. நீங்கள் கிரயம் வாங்கும் பொழுது அந்த விவசாய இணைப்பு சந்தியா மகேஷ் பெயரில் தான் இருந்தது என்றால் ஆமாம். அந்த தினேஷுக்கு யார் எழுதிக் கொடுத்தார்கள் எந்த ஆவணத்தின் அடிப்படையில் எழுதிக் கொடுத்தார்கள் என்பது தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன் எப்படி என்றால் அவரிடம் கேட்டேன் சொன்னார் ஸ்ரீதர் என்பவர் பொது அதிகார பத்திரம் எழுதி அதன் அடிப்படையில் தினேஷ் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.
4. அமராவதி சிட் பண்ட் நிறுவனத்தில் மேலாளர் ஸ்ரீதர் என்றால் சரிதான். அந்த அமராவதி ஸ்ரீதருக்கு மேலாளர் என்று பெயரில் தான் பொது அதிகார பத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பொது அதிகார பத்திரத்தில் இந்த மின் இணைப்பு விவரங்கள் உள்ளதா இல்லையா என்றால் சரியாக தெரியவில்லை. அந்த மூல பொது அதிகார பத்திரம் உங்களிடம் தான் உள்ளது என்றால் ஆமாம். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும் என்றால் ஆமாம். அந்த பொது அதிகார பத்திரத்தில் இந்த மின் இணைப்பு எண் இல்லை என்றால் ஆவணத்தை பார்த்து தான் கூற இயலும்.
5. நீங்கள் உடுமலையிலிருந்த சொத்தை கிரையம் வாங்கிய பொழுது துரைசாமி லேயவுட் ஆவாரம்பாளையம் கோவைமாநகரில் தான் குடியிருந்து வந்துள்ளீர்கள் என்றால் ஆமாம். தற்போது அங்கு தான் குடியிருக்கிறீர்கள் என்றால் தற்பொழுது நான் அங்கு குடியிருக்கவில்லை பீளமேடு நேரு நகருக்கு ஏர்போர்ட் அருகில் குடி பெயர்ந்து விட்டேன், அந்த வீடும் அந்த பழைய வீடும் என்னுடையது தான். உங்களது வியாபாரம் எல்லாம் துரைசாமி லேஅவுட் நடக்கிறது என்றால் ஆமாம் துரைசாமி லேஅவுட் இல் இருந்து 100 அடி ரோட்டிற்கு ஒரு கிலோ மீட்டர் வரும் என்றால் ஆமாம்.
6. 2008 முதலில் மின்னிணைப்பு மனு கொடுத்து போது திரும்ப திருப்பி விட்டார்கள் என சொல்லியுள்ள நிலையில் அந்த ஆவணத்தை வைத்துள்ளீர்களா என்றால் உடுமலை காவல் நிலையத்தில் உள்ளது

திருப்பப்பட்ட விண்ணப்பத்தை சரி செய்து மீண்டும் சமர்ப்பிக்காமல் நீங்கள் புதியதாக விண்ணப்பத்தை கொடுத்துள்ளீர்கள் என்றால் நான் திருப்பப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவில்லை. காவல் நிலையத்தில் மேற்படி ஆவணத்தை பெற்றுக்கொள்ளவில்லை என்றாலும் நீங்கள் வழக்குக்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

7. நீங்கள் 100 அடி ரோட்டில் உள்ள தினேஷ் என்பவர் அலுவலத்திலிருந்து சந்தியா மகேஷ் என்று கையொப்பமிட்ட விண்ணப்பத்தை பெற்று புதியதாக தினேஷ் கொடுத்த விண்ணப்பத்தை மின்வாரியத்தில் கொடுத்தீர்கள் என்றால் ஆமாம். தினேஷ் மேற்படி விண்ணப்பத்தில் கையொப்பத்தை யாரிடம் எப்படி வாங்கினார்கள் என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் ஆமாம். நீங்கள் உடுமலை இபி அலுவலகத்தில் நான் தினேஷிடம் இருந்து கிரயம் வாங்கியதாகவும் தினேஷ் இடமிருந்து தான் பெயர் மாற்று விண்ணபத்தில் கையொப்பம் பெற்று விண்ணப்பித்துள்ளேன் என்று மின்சார வாரியத்திற்கு கடிதம் வைத்திர்களா என்றால் இல்லை. நீங்கள் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றாலும் நீங்கள் தினேஷ் என்பவரிடமிருந்து பெயர் மாற்றம் செய்ய சொல்லி தான் விண்ணப்பம் செய்துள்ளீர்கள் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றாலும் இல்லை.

8. உங்களுக்கு முதலில் திருப்பப்பட்ட விண்ணபத்தில் சர்வீஸ் ஓனர் கையொப்பம் இல்லை, வரைபடத்தில் கிணறு குறிப்பிடவில்லை, சர்வீஸ் யார் பெயரில் உள்ளது என தெரியவில்லை என திருப்பப்பட்டுள்ளது என்றால் அதை பார்த்து தான் கூற இயலும். அந்த ஆவணம் உங்களிடம் தான் உள்ளது என்றால் இல்லை காவல் நிலையத்தில் உள்ளது. கோமங்கலம் காவல் நிலையத்தில் விசாரித்தது நில அபகரிப்பு வழக்கு சம்பந்தப்பட்டது என்றாலும் ஆமாம். ரிட் பெட்டிசன் போட்டு ரிட்டன் ஆன ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் அடுத்த வாய்தாவில் செய்கிறேன். நீங்கள் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்த பொழுதும் ஆவாரம்பாளையத்தில் தான் குடியிருந்தீர்கள் என்றாலும் அங்கிருந்து உடுமலைப்பேட்டைக்கு ஈபி அலுவலகத்திற்கு வந்து மின் இணைப்பு தாக்கல் செய்தீர்கள் என்றால் ஆமாம் நூறடி ரோடு.

9. 100 அடி ரோடு மற்றும் துரைசாமி லேஅவுட் இரண்டும் அருகில் தான் உள்ளது என்றாலும் நீங்களும் தினேஷம் சேர்த்து போலியாக

கையெழுத்து போட்டு அந்த ஆவணத்தை கொடுத்து தான் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்துள்ளீர்கள் என்றால் இல்லை.

10. பாலாஜி என்பவரிடமிருந்து வாங்கிய நிலம் ஏற்கனவே வாங்கிய 13 ஏக்கருக்கு நடுவில் 5 ஏக்கர் 8 செண்ட் நிலம் உள்ளது என்றால் பாலாஜி என்பவரின் நிலம் சென்டரில் உள்ளது. சந்தியா மகேஷின் நிலம் ஓரமாக உள்ளத 245 சர்வீஸ் நம்பர் விவசாயத்திற்கு என்று கொடுக்கப்பட்ட தனியான மின் இணைப்பு என்றால் ஆமாம் அந்த மின் இணைப்பு வாங்க வேண்டும் என்றால், உழவர் அட்டை விவசாய பாதுகாப்பு அட்டை போன்ற அட்டைகள் வைத்து தான் பெயர் மாற்றம் செய்ய இயலும் என்றால் அப்படி இல்லை. நீங்கள் உழவர் அட்டை விவசாய பாதுகாப்பு அட்டை அல்லது விவசாய சம்பந்தமான பதிவுகள் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. உங்களிடம் அதுபோன்ற அட்டைகள் மின் இணைப்பு பெற்ற காலங்களில் இல்லை என்றாலும் சரியல்ல. விவசாயத்திற்கு என்று கொடுத்ததால் தான் தினேஷ் என்பவர் தனது பெயரிலேயே மாற்றம் செய்யவில்லை என்றாலும் தினேஷ் என்பவர் உடன் சேர்ந்து நீங்கள் பெயர் மாற்றம் செய்துள்ளீர்கள் என்றால் இல்லை.

11. தினேஷும் அவரது மேலாளர் ஸ்ரீதரும் உறவினர்கள் என்றாலும் ஸ்ரீதரின் அக்கா மகன் தினேஷ் என்றால் இல்லை அவர்கள் உறவினர்கள் இல்லை அமராவதி சிட் பண்ட்ஸ் நிறுவனத்திற்கு எழுதிக் கொடுக்கப்பட்ட சொத்தை தினேஷ் என்பவர் எப்படி வாங்கினார் என்பது குறித்து ஆவணத்தை பார்த்து தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. அமராவதி சிட்பண்ட்ஸ் நிறுவனத்திற்கு சந்தியா மகேஷ் செக்யூரிட்டி பிணையத்திற்காக கொடுக்கப்பட்ட பொது அதிகார பத்திரத்தை தவறாக பயன்படுத்தி நிலத்தை முழுவதையும் அபகரிக்கும் நோக்கத்தில் தினேஷிடம் இருந்து ஒரு கிரைய பத்திரமும், தினேஷிடம் இருந்து நீங்களும் நீங்களாகவே ஒரு கிரைய பத்திரத்தை தயார் செய்து சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் செயல்பட்டு உள்ளீர்கள் என்றால் இல்லை. அதனால் தான் நீங்கள் பதிவு செய்த அந்த கிரைய பத்திரத்தில் மின் இணைப்பை சேர்த்தி உள்ளார்கள் என்றாலும் அதற்கு முன்பு உள்ள ஆவணங்களில் அந்த மின் இணைப்பு விவரங்கள் இல்லை என்றாலும் பதில் தெரியவில்லை. மேற்படி ஆவணங்களை நீங்கள் தாக்கல் செய்தால் நீதிமன்றத்திற்கு உண்மை விவரம் தெரிந்துவிடும் என்பதால் வேண்டுமென்றே ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, நான் தாக்கல் செய்கிறேன்.

12. நீங்கள் மின்வாரியத்திற்கு பாண்டு எழுதிக் கொடுக்கும் பொழுது

சாட்சி கையப்பமாக சின்னசாமி மகன் பாலசுப்பிரமணியன் என்பவரை சாட்சி கையொப்பம்  செய்து ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் தெரியவில்லை. அது குறித்து உங்களுக்கு தெரியும் என்றாலும் நீங்கள் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறீர்கள் என்றாலும் சரியல்ல.

13. 20 கையொப்பம் பெற்றார்கள் என்று சொல்லியுள்ள நிலையில் அது எந்த காவல் நிலையம் என்றால் உடுமலைப்பேட்டை காவல் நிலையம். சந்தியா மகேஷ் கையெழுத்து போட்ட பத்திரங்கள் உங்களிடம் உள்ளது என்றால் ஆமாம். சந்தியா மகேஷுக்கு அந்த சொத்துக்கள் எப்படி வந்தது என்று தெரியாது என்றால் ஆமாம். மூல பத்திரங்கள் வைத்திருந்த பொழுதும் உங்களுக்கு அந்த சொத்துக்கள் சந்தியா மகேஷுக்கு எப்படி வந்தது என்று தெரியாது என்றால் ஆமாம். உங்களிடம் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் கையொப்பங்கள் பெறவில்லை என்றாலும் வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

14. நீங்கள் போட்ட கையெழுத்து அல்ல என்பதற்கு கையெழுத்து நிபுணர் ஆவணம் வந்ததாக சொல்லியுள்ள நிலையில்  அந்த ஆவணம் உள்ளதா என்றால் இல்லை, காவல் நிலையத்தில் தெரிவித்தார்கள். சந்தியா மகேஷின் மூல பத்திரங்கள் அதில் இடப்பட்ட சந்தியா மகேஷின்  கையொப்பம் செய்த ஆவணங்கள் அனைத்தும் உங்களிடம் இருப்பதால் நீங்கள் தான் நீங்கள் தான் சந்தியா மகேஷின் கையெழுத்தை தினேஷுடன் சேர்ந்து சந்தியா மகேஷ் என கையொப்பமிட்டு மின் இணைப்பு பெயர் மாற்ற விண்ணப்பத்தில் விண்ணப்பித்து விட்டு வழக்கிற்காக  பொய் சாட்சியம்  அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.